**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.446/2024 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர் ஆவார். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மாரிமுத்து | மாவட்டம் | : |
| த/பெ.பெயர் | : மாணிக்கம் | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் வாதி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. 31.03.1998 தேதியிலுள்ள வாதியும், அறுமுகமும் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 23.07.2024 வாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 2) அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 23.07.2024 வாதி பெயரிலுள்ள குடிநீர் இணைப்பு ரசீது (எண்ணிக்கை 1) அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 23.07.2024 தேதியிலுள்ள வாதி பெயரிலுள்ள மின்கட்டண ரசீது(எண்ணிக்கை 5) அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. வாதியின் ஆதார் கார்டு நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.